1990 ஏப்ரல் 3]

கெடிலம் ஆற்றில் தரைப்பாலம் அமைத்தல்.

*3517 திரு. இ. புகழேந்தி :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

கடலூர் கம்மியபேட்டை பகுதி கெடிலம் ஆற்றில் தரைப் பாலம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. இ. புகழேந்தி : மாண்புமிகு தலைவர் அவர்களே, கடலூர் நகரில் மிகுந்த போக்குவரத்து நெருக்கடியைக் குறைக்கும் வண்ணம், கிழக்கு கடற்கரைச் சாலை அமைய உள்ள இந்தத் தருணத்தில் மிகவும் பயன்பாடு உள்ளதாக அமையும் என்பதாலும், முன்பு தமிழக முதல்வராக டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சியிலே இருந்தபோது கடலூர் கெடிலம் ஆற்றில் தரைப்பாலம் போடுவதற்கான கருத்துரு உருவாக்கப்பட்டு, இடைக்காலத்திலே அது கவனிக்கப்படாமல் விடப்பட்ட அந்த நிலையை மாற்றி மீண்டும் அந்தக் கருத்துருவுக்கு உயிரூட்டப்படுமா? தரைப்பாலம் அமைவதற்கான கருத்து பரிசீலிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டுள்ள இந்தப் பாலம் கடலூர் நகராட்சியின் பராமரிப்பில் உள்ள சாலையான கம்மியபேட்டை அருகில் கெடிலம் நதியின் குறுக்கே கட்டப்பட வேண்டும். இந்த இடத்தில் ஆற்றின் அகலம் 220 மீட்டர் ஆகும். இது கடல் ஓரமாக இருக்கின்ற காரணத்தால் தரைப்பாலம் சரிபட்டு வராது. அதை உயர்மட்ட பாலமாகத்தான் அமைக்க வேண்டும். இதற்கு 220 இலட்சம் தோராயமாக மதிப்பீடு செய்யப்பட்டு இருக்கிறது. இதுவும் நகராட்சிக்கு உட்பட்ட பகுதி என்ற காரணத்தால் நகராட்சி அந்தப் பணத்தைக் கொடுத்தால் நெடுஞ்சாலைத்துறை கட்டித் தரும்.

திரு. இ. புகழேந்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடுமையான வெயிலில், கொடுமையான பசியில், மதிய வேளையில் கடலூரில் சிங்காரத் தோப்புப் பாலம் அமைய உள்ள இடத்தை பார்வையிட்ட மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அண்ணன் அவர்கள் இந்தத் தரைப் பாலத்தையும் அமைத்திட அப்படிப் பார்வையிட்டு ஒரு முடிவை உருவாக்கு வார்களா, கருத்துருவை உருவாக்குவார்களா என்பதை அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதற்குப் பகலிலே வர வேண்டுமா, அல்லது மாலை நேரத்திலே வரலாமா?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவ்வளவு கஷ்டப்பட்டு வந்த பாலத்தையே முடிப்பதற்கு நான் முயற்சி எடுத்துக்கொண்டு இருக்கிறேன். ஆனால் நகராட்சிக்குள்ளே இருக்கிற பாலத்தை முடிப்பதற்கு இன்னும் நாட்களாகும். எனினும் மாண்புமிகு உறுப்பினருடைய உணர்வை நான் மதிக்கிறேன்.

சிட்கோ தொழிற்பேட்டை ஏற்படுத்துதல்.

*3838 திரு. எஸ். காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி :

மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூரில் சிட்கோ தொழிற்பேட்டை ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்பெறும்?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

9-50 மணி

திரு. எஸ். காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, முதுகுளத்தூர், கமுதி வட்டங்கள் மிகவும் பின்தங்கிய வட்டங்களாக இருப்பதால், அங்கே வேறு எந்த சிறு தொழிலையும் ஆரம்பிப்பதற்கு வாய்ப்பு இல்லாத நிலையில் அரசாங்கம் ஒரு சிறு தொழில் பேட்டையை உருவாக்க முயற்சிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஏற்கனவே இந்த மன்றத்தில் பல கேள்விகளுக்கு பதில் அளிக்கையில் தொழில்கூடங்கள் எந்த அடிப்படையில் அமைக்கப்பட வேண்டுமென்பதைப்பற்றி விளக்கமாக நான் அறிவித்திருக்கிறேன். அரசாங்கம் முன் வந்து ஒரு இடத்தில் தொழில் கூடங்களைக் கட்டி, அங்கு இருக்கக்கூடியவர்களைத் தொழில் தொடங்குங்கள் என்று கட்டாயப்படுத்த முடியாது. எனவே எந்தப் பகுதியில் இருக்கக்கூடிய மக்கள் தொழில் தொடங்குவதற்கு ஆர்வமாக இருக்கிறார்களோ அவர்கள் இருபது பேர் ஒன்று சேர்ந்து, அரசாங்கத்திற்கு விண்ணப்பத்தைத் தர வேண்டும், ''இந்தப் பகுதியில் நாங்கள் சிறு தொழில் தொடங்குவதற்கு ஆர்வமாக இருக்கிறோம், அரசாங்கம் உதவி செய்ய வேண்டும்'' என்று. குறைந்தபட்சம்